DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.

**Spl.S.C.No.13/2019**

**P.W.7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.S.பிரகாஷ் |
| Father's Name | : | திரு.M.சரவணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 51 |

(Accused 1,2 and 4 are absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of July 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு துறையூர் வட்டாட்சியராக பணியில் இருந்த போது முசிறி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க துறையூர் காவல் நிலையக் குற்ற எண்.479/2017 வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் ஆகிய திருமதி.கீதா , அவரது கணவர் செல்வராஜ் எதிரிகள் அருணாச்சலம் மற்றும் கருப்பண்ணன் ஆகியோர்களின் சாதி குறித்து வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையின்படி சான்று வழங்கினேன்.

இந்த வழக்கில் கண்டநிகழ்நிலைப் புகார்தாரர் ஆகிய திருமதி.கீதா , அவரது கணவர் செல்வராஜ் என்பவர்கள் இந்து, பறையன் எனப்படும்

பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும் எதிரிகள் அருணாச்சலம் இந்து, ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், கருப்பண்ணன் இந்து, அம்பலக்காரர் வகுப்பைச் சேர்ந்தவர் எனவும் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை வழங்கினேன். நான் வழங்கிய சாதி சான்றிதழ் மெய்தன்மை சான்று **அ.த.சா.ஆ.15** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை – இல்லை</u>**

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.),XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe